1987 ஏப்ரல் 20]

சுகாதாரத்தை ஏற்படுத்துவதில் தொழிற்கூடத்தில் இருக்கின்ற உரிமையாளரால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதோடு மட்டுமல்லாமல் அங்கே போர் வெல் அரசு அமைத்தால் . . . (மணியடிக்கப்பெற்றது) (பதில் இல்லை.)

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடியில் செங்கல் தொழிற்சாலை.

409—(* வினா எண் 8142) திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடியில் சேம்பர் செங்கல் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடியில் பொதுப்பணித் துறை கண்மாய்களில் சேம்பர் செங்கல் தொழிற்சாலை ஒன்றை அமைக்க மண் பரிசோதனை செய்யப்பட்டு, ஊரகத் துறையிலிருந்து அந்த இடத்தில் அந்த தொழிற்சாலையை அமைப்பதற்கான செயற்குறிப்பும் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, அந்தப் பகுதி தொழிற்சாலை இல்லாத பகுதியாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்த செயற்குறிப்பை வாங்கிப் பார்த்து, முன் உரிமை கொடுத்து அங்கே அந்தத் தொழிற்சாலையை அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறப்புத் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை பகுதியிலுள்ள ராயவரம் என்ற இடத்தில் அண்ணா அரிசன கூட்டுறவு செங்கல் தொழிற்சாலை என்ற

பெயரில் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டமாதிரி எந்த ஒரு கருத்துருவும் இருப்பதாக குறிப்பில் இல்லை. அப்படி ஏதாவது முயற்சி இருந்தால், புதிதாக தொடங்கப்படும் திட்டத்தோடு அதனையும் சேர்த்து, லாபகரமாக, அவசியமானது என்று கருதும் நிலை இருந்தால், அதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் இப்படிப்பட்ட சேம்பர் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன? மேலும் எத்தனை ஆரம்பிக்க அரசு உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ராயவரம் என்கிற பகுதியில் அதனை அமைக்கின்ற பணி தொடங்கப் பட்டிருக்கிறது. மற்றபடி எந்த இடத்திலும் அதனை அமைப் பதற்கான கருத்துரு எதுவும் இங்கே இல்லையென்று முன்பே குறிப்பிட்டேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியதிலிருந்து, அவர் குறிப்பிட்ட இடத்தில் அவசியம் என்ற நிலை இருந்தால், நிதி ஆதாரம் மற்றும் பிரச்சினைகளை எல்லாம் பொறுத்து அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி விவேகானந்தர் ஆலயத்திற்கு கேபிள் கார்.

410—(*வினா எண் 9805) திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி விவேகானந்தர் ஆலயத்திற்கு கேபிள் கார் வசதி செய்து கொடுக்க அரசு உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.